பக்கங்கள் 16

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 27 சனிக்கிழமை 16.12.2023 அதிர்வு 138

## இரத்தக் காயங்களுடன் பெண்ணின் சடலம் மீட்பு

**பொலிஸார் தீவிர விசாரணை**

இரத்தக் காயங்களுடன் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு 7, விஜேராம மாவத்தையில் உள்ள வீடொன்றிலேயே 04 ▶







# வாக்குப் பிச்சை கேட்கும் ராஜபக்ஷ பட்டாளத்தை ஓட ஓட விரட்டியடியுங்கள்

## மக்களிடம் அநுர வேண்டுகோள்

“ஆட்சி அதிகாரத்திலிருந்து மக்களால் வெளியேற்றப்பட்ட ராஜபக்ஷ அணியினர், எதிர்வரும் தேர்தலில் மீண்டும் ஆட்சி அதிகாரத்ததைக் கைப்பற்றும் நோக்குடன் பிரசாரங்களை ஆரம்பித்துள்ளனர். வாக்குப் பிச்சை கேட்கும் அவர்களை ஓட ஓட விரட்டியடிக்க வேண்டும் என்று மக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.” 04 ▶



# பாதுகாப்பு சபையில் கலந்துரையாடி பதிலளிக்கின்றேன்

## பொலிஸ் பதிவு தொடர்பில் மனோவுக்கு ஜனாதிபதி உறுதி



வீடு வீடாக விபரங்களைத் திரட்டும் பொலிஸாரின் பதிவு நடவடிக்கைகள் தொடர்பில் பாதுகாப்பு சபையில் கலந்துரையாடி பதிலளிக்கின்றேன் என இது விடயமாக தன்னைச் சந்தித்த தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பியிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. தனது அதிகாரபூர்வ எக்ஸ் – ருவிட்டர் தளத்தில், “இது தொடர்பில் ஜனாதிபதியின் முடிவு அறியப்படும்வரை, அரசியல் 04 ▶



## தாய் கழுத்தறுத்துப் படுகொலை; சந்தேகத்தில் இளைய மகள் கைது



தாய் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் அவரது மகள் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, 04 ▶

## மதுபான விற்பனை நிலையத்தில் ஆண் ஒருவர் அடித்துப் படுகொலை



மதுபான விற்பனை நிலையத்தில் இடம்பெற்ற தகராறில் ஆண் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கண்டி பிரதேசத்தில் உள்ள மதுபான நிலையத்தில் 04 ▶



# முல்லைத்தீவில் கொட்டித்தீர்க்கும் கனமழை வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியமையால் அவலம்

## இன்று காலை வரையான தகவல் அடிப்படையில் 695 குடும்பங்களை சேர்ந்த 2117 பேர் பாதிப்பு





**(சண்முகம் தவசீலன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வருகின்ற கனமழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அனைத்து குளங்களும் முற்று முழுதாக நிறைந்து வான் பாய்கின்ற நிலைமை காணப் படுகிறது.

தற்போது பெய்கின்ற சிறிய மழைக்கு கூட மிக பெரிய அழிவுகளை எதிர் நோக்குகின்ற நிலைமைக்கு முல் லைத்தீவு மாவட்ட மக்கள் வந்துள்னர்.

இந்தப் பின்னணியில் இன்று பகல் திடீரென வந்த வெள்ளம் காரணமாக ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் புளியங் குளம். பண்டாரவன்னி உள்ளிட்ட கிராம் மக்களின் வீடுகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் பலர் வெள் ளத்தில் சிக்கியுள்ளனர். இவர்களை மீட்கும் பணி தீவிரமாக இடம்பெற்று வருகிறது.

இதேபோன்று குளங்களுக்கான நீர் வரத்து மிக வேகமாக காணப்படுகின்ற நிலைமையில் பல்வேறு குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயத்தையும் எதிர்கொண்டுள்ளன. வான் பாய்கின்ற நீர் மக்கள் குடியிருப்புகளுக்குள் செல் வதற்கான வாய்ப்புகள் உள்ளமையி னால் மக்கள் மிக அவதானமாக செயல்படுமாறு முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரி வித்துள்ளது.

இதேவேளை இன்று காலை 9 மணி வரையான தகவல் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிலே அம்பாள்புரம், கரும்புள்ளியான், ஒட்ட றுத்தகுளம், நட்டாங்கண்டல், பாண்டியன் குளம், செல்வபுரம், பாலிநகர், சிராட்டி குளம், சிவபுரம், மூன்றுமுறிப்பு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 261 குடும்பங்களைச் சேர்ந்த 870 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் மாங்குளம், பனிக்கன்குளம், பண்டாரவன்னி, இந்துபுரம், தட்டையர் மலை, புளியங்குளம், தச்சடம்பன் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 127 குடும்பங்களைச் சேர்ந்த 423 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலா ளர் பிரிவுக்கு உட்பட்ட கள்ளப்பாடு, சிலாவத்தை, செல்வபுரம், வற்றாப்பளை, தண்ணிமுறிப்பு, முள்ளியவளை தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 44 குடும்பங்களைச் சேர்ந்த 136 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் அணிஞ்சியன்குளம், உயி லங்குளம், தென்னியங்குளம், கோட்டை டகட்டிய குளம், ஆலங்குளம், தேராங் கண்டல், கல்விளான், மல்லாவி, யோக புரம் கிழக்கு, புகழேந்திநகர், பாரதி நகர், யோகபுரம் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 86 குடும்பங் களைச் சேர்ந்த 267 பேர் பாதிக்கப் பட்டுள்ளன.

**(03ஆம் பக்கம் பார்க்க)**







# முல்லைத்தீவில் கொட்டித்தீர்க்கும் கனமழை வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியமையால் அவலம்

**(02ஆம் பக்கத் தொடர்ச்சி)**

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர்கள் பிரிவில் புதுக்குடியிருப்பு மேற்கு மற்றும் தேவிபுரம் கிராம அலுவலர் பிரிவுகளில் 177 குடும்பங்களைச் சேர்ந்த 415 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்த வகையிலே மொத்தமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 695 குடும்பங்களைச் சேர்ந்த 2117 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 17 பேரும், புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 21 பேரும் பண்டாரவன்னி கிராம அலுவலர் பிரிவில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 55 பேருமாக 28 குடும்பங்களைச் சேர்ந்த 93 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.











# தொடர் மழை காரணமாக வவுனியா வடக்கில் 22 குடும்பங்களைச் சேர்ந்த 84 பேர் பாதிப்பு



(கி.வசந்தரூபன்)

தொடரும் மழை காரணமாக வவுனியா வடக்கில் 22 குடும்பங்களை சேர்ந்த 84 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் இன்று (16) தெரிவித்துள்ளது.

மாறாஇலுப்பை பகுதியில் 05 குடும்பங்களை சேர்ந்த 22 பேரும், சின்னடம்பன் பகுதியில் 09 குடும்பங்களை சேர்ந்த 35 பேரும் இடம்பெயர்ந்த நிலையில் இரு பொது மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நைனாமடு பகுதியில் 02 குடும்பங்களை சேர்ந்த 06 பேரும், நெடுங்கேணியில் 06 குடும்பங்களை சேர்ந்த 21 பேரும் இடம்பெயர்ந்து உறவினர்களின் வீட்டில் தஞ்சமடைந்துள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தாய் கழுத்தறுத்து...

கஹவத்தை, வெள்ளந்துறையில் கடந்த 13ஆம் திகதி, வினிதா ஜயசுந்தர என்ற 71 வயதுடைய பெண் வீட்டருகே கழுத்தறுத்துப் படுகொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொலை செய்யப்பட்ட பெண்ணின் இளைய மகள் இன்று அதிகாலை 3.30 மணியளவில் கைது செய்யப்பட்டார் என்று கஹவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

38 வயதான திருமணமாகாத பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இவர் கஹவத்தை பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றுகின்றார்.

உயிரிழந்த பெண்ணின் இறுதிக் கிரியைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் கஹவத்தை பொலிஸ் நிலையப் பிரதான பொலிஸ் பரிசோதகர் கருணாரத்ன பிள்ளைகளையும் உறவினர்களையும் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து சாட்சியங்களைப் பதிவு செய்தனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட மகள் தனது தாயை வீட்டுக்குள் கழுத்தறுத்துக் கொலை செய்து சில மணித்தியாலங்களின் பின்னர் சடலத்தை வீட்டின் பின்னால் கொண்டு சென்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

பின்னர், வீட்டினுள் சிதறிக் கிடந்த இரத்தக்கறைகளை அகற்றுவதற்காக வீட்டை முழுமையாகக் கழுவி அவர் சுத்தம் செய்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொலையைச் செய்து விட்டு, முற்பகல் 11.40 மணிக்கு தனது பணியிடத்துக்குச் சென்ற சந்தேகநபர், மாலை 3.40 மணியளவில் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பியிருக்கலாம் என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

அதன்பின்னர் சந்தேகநபர் கஹவத்தை பொலிஸாருக்குத் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு தாய் கொல்லப்பட்டுள்ளார் என்ற செய்தியைத் தெரியப்படுத்தியுள்ளார்.

இரத்தினபுரி மோப்ப நாய்ப் பிரிவினர் நடத்திய விசாரணைகளின் போது சந்தேகநபரின் கைக்கடிகாரம் இறந்த தாயின் சடலத்திலிருந்து சில அடி தூரத்தில் கிடந்தது என்றும், மோப்ப நாய் வீட்டை விட்டு வெளியேறவில்லை என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் வெளிவரும் உண்மைகளின் அடிப்படையில் வெளியார் ஒருவர் இதனைச் செய்திருக்க முடியாது எனத் தோன்றியதால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று கஹவத்தை பொலிஸ் நிலையப் பிரதான பொலிஸ் பரிசோதகர் கருணாரத்ன தெரிவித்தார்.

### வாக்குப் பிச்சை...

– இவ்வாறு ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் விசேட தேசிய மாநாடு என்ற பெயரில் ராஜபக்ஷக்கள் தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் தேர்தல் பிரசாரங்களை ஆரம்பித்துள்ளனர். நாட்டைச் சீரழித்த அவர்கள், வெட்கம் இல்லாமல் மக்களிடம் வாக்குப் பிச்சை கேட்கின்றனர். கடந்த வருடம் மக்கள் புகட்டிய பாடத்தை அவர்கள் மறந்துவிட்டார்களா அல்லது போர் வெற்றிப் பேச்சுக்களை முழங்கி மக்களை ஏமாற்றலாம் என்று அவர்கள் நினைக்கின்றார்களா என்று தெரியவில்லை.

இந்த ராஜபக்ஷ பட்டாளம் இனி வரும் நாள்களில் வாக்குப் பிச்சை கேட்டு மக்களைத் தேடி கிராமங்களுக்கும், வீடுகளுக்கும் வருவார்கள். அவர்களை மக்கள் ஓட ஓட விரட்டியடிக்க வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவோ அல்லது ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியோ நாட்டினதும் மக்களினதும் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வைப் பெற்றுத் தரும் கட்சிகள் அல்ல.

தேசிய மக்கள் சக்திதான் நாட்டினதும் மக்களினதும் நலனுக்காகச் செயற்படும் ஒரேயொரு கட்சியாகும். எனவே, தேசிய மக்கள் சக்தியின் பின்னால் நாட்டு மக்கள் அனைவரும் அணிதிரள வேண்டும்." – என்றார்.

### இரத்தக்காயங்களுடன்...

பெண்ணின் சடலம் இன்று மீட்கப்பட்டுள்ளது என்று கறுவாத்தோட்டம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மித்ராணி பெர்னாண்டோ ஸ்மின் என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் அறை ஒன்றில் குப்புற விழுந்து கிடந்ததைக் காண முடிந்தது என்றும், இடுப்புப் பகுதியில் இரத்தக் காயங்கள் காணப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மரணம் கொலையா அல்லது இயற்கையான மரணமா என்பது இதுவரை கண்டறியப்படவில்லை. மரணத்துக்கான காரணத்தை அறிய பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றன.

மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### பாதுகாப்பு சபையில்...

யாப்பில் இருக்கின்ற, ஆட்சி மொழி சட்டத்தை மீறுகின்ற இந்தப் பொலிஸ் பதிவு படிவங்களை நிராகரிக்கும்படி மக்களைக் கோருகின்றேன்." – என்று குறிப்பிட்டுள்ளார்.

### மதுபான விற்பனை...

நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடுகொஸ்தர – ரணவன பிரதேசத்தை சேர்ந்த நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# கந்தளாய் நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்க வாய்ப்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தற்போது பெய்துவரும் அடைமழை காரணமாக கந்தளாய் நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் உயரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. எந்த நேரமும் வான் கதவு திறக்கப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

கந்தளாய் பிரதேச செயலகம் மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பொது மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கந்தளாய் நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் 109,450 ஏக்கர் அடி பதிவாகியுள்ளதால் மேலும் மழை பெய்தால் வான் கதவுகள் திறக்கப்படலாம் என்று பிரதம நீர்ப்பாசன பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.





# தொடர்ச்சியாக சீரற்ற காலநிலையால் மன்னாரில் 102 குடும்பங்கள் பாதிப்பு!

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 102 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 72 குடும்பங்களை சேர்ந்த 161 பேர் இடம் பெயர்ந்து தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 30 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்து உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர் என்று மன்னார் அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் மாவட்டத்தில் பெரும்பாலான தாழ் நில பிரதேசங்கள் வெள்ள அனர்த்தத்துக்கு உள்ளாகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத் துவ பிரிவின் மாவட்ட உதவி பணிப்பாளர் கே. திலீபன் தெரிவித்துள்ளார்.

பாலியாறு, பறங்கியாறு நீர் மட்டம் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் மன்னார் -யாழ்ப்பாணம் ஏ-32 பிரதான வீதி வெள்ள நீரில் மூழ்கும் வாய்ப்பு காணப்படுகின்றது. இதனால் அந்த வீதியூடாக பயணம் செய்யும் மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் மக்கள் பாதுகாப்புடன் செயற்படவேண்டும் என்றும் அவசர உதவிக்கு மன்னார் அனர்த்த முகாமைத்துவ பிரிவு தொலைபேசி இலக்கமான 023-2250133 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் மன்னார் பிரதேச செயலர் பிரிவில் அவசர தொடர்புகளுக்கு 076-1258120 என்ற இலக்கத்தைப் பயன்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## உயர் பதவியில் குற்றவாளி

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் சாலிய பீரிஸ் அரசாங்கத்துக்கும், உயர் நியமனங்களுக்குப் பொறுப்பான அரசமைப்புக் கவுன்ஸிலுக்கும் ஒரு முக்கிய விடயத்தைச் சுட்டிக் காட்டி இருக்கின்றார்.

அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தொடர்பாக அரசின் அதிகாரிக்கு - அதுவும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்ட வேண்டிய காவல்துறை அதிகாரிக்கு - எதிராக உயர் நீதிமன்றம் வழங்கி உள்ள முக்கிய தீர்ப்பை உதாசீனம் செய்து, புறம் தள்ளி, அரசாங்கம் கண்ணை மூடிக்கொண்டு இருக்க முடியாது என்று அவர் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

மிரிஹான பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக் கப்பட்டிருந்த நிலையில் தாம் கொடூரமாகச் சித்திர வதை செய்யப்பட்டு, தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டன எனத் தெரிவித்து ஒருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவின் மீது இப்போதைய பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனையும் மற்றும் மூன்று பொலிஸ் அதிகாரிகளையும் குற்றவாளிகளாகக் கண்டிருக்கும் உயர்நீதிமன்றம் அவர்கள் நால்வரும் சேர்ந்து 20 லட்சம் ரூபாவை நஷ்ட ஈடாக மனுதாரருக்கு செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டிருக்கின்றது.

இந்த உத்தரவு குறித்த விடயத்தில் அரசாங்கம் கண்ணை மூடிக்கொண்டு இருக்க முடியாது என்று சட்டத்தரணி சாலிய பீரிஸ் சுட்டுவது கவனிக்கப்பட வேண்டிய மிக முக்கியமான விடயம்தான்.

''சாதாரண பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக அடிப்படை உரிமை முறைப்பாடுகள் நிலுவையில் இருக்கும் போதே அவர்களின் பதவி உயர்வுகள் மறுக்கப்படுகின்றன. அவர்கள் பொறுப்பு என்று கண்டறியப்பட்டால் அது ஒரு களங்கமாகக் கருதப்படுகிறது. அதே தரத்தை, பதில் பொலிஸ்மா அதிபரிடம் இருந்து, அரசு கோரக்கூடாது என்பதற்கு எந்தக் காரணமும் இல்லை.'' - என்கிறார் சட்டத்தரணி சாலிய பீரிஸ்.

தற்போதைய பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் உட்பட நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள், 2011 ஆம் ஆண்டு தேசபந்து தென்னகோனின் மேற்பார்வையின் கீழ் இருந்த மிரிஹான பொலிஸ் நிலையத்தில் மனுதாரர் சுமங்கலை சட்டவிரோதமாக கைது செய்து, தடுத்து வைத்து, சித்திரவதை செய்ததன் மூலம் அவரது அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என்ற தீர்ப்பை நீதியரசர்கள் குமுதினி விக்கிரமசிங்க மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் நீதியரசர் எஸ்.துரைராஜா வழங்கியிருக்கின்றார்.

அரசமைப்புக் கவுன்ஸில் இந்த விடயத்தை விரைவில் ஆராய வேண்டும் என்று சட்டத்தரணி சாலிய பீரிஸ் கோருகிறார்.

மேன்முறையீட்டு தலைமை நீதியரசரை உயர்நீதிமன்ற நீதியரசராகப் பதவியுயர்த்தும் விடயம் தொடர்பில்

அவரின் கடந்தகால சேவைப் பணி தொடர்பில் ஆயிரத்தெட்டுக் கேள்விகளைக் கேள்விக் கொத்தாகத் தந்து அவ்விடயத்தை நோண்டுகிறது அரசமைப்புக் கவுன்ஸில்.

அப்படியிருக்கையில், நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் கடப்பாடு கொண்ட பொலிஸின் தலைமைப் பொறுப்பில் அடிப்படை உரிமையை மீறி சித்திரவதையில் ஈடுபட்டவர் எனஉயர்நீதிமன்றத்தினால்உறுதிப்படுத்தப்பட்டவர் இருப்பதை அரசமைப்புக் கவுன்ஸில் கனத்தில் எடுக்காமல் இருப்பது மிகப் பெரும் கேலிக்கூத்து. அது குறித்து அரசமைப்புக் கவுன்ஸில் உடனடியாகக் கூடி ஒரு முடிவு எடுக்க வேண்டிய கடப்பாடு உடையது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையிலான அரசமைப்புக் கவுன்ஸில், 2024 ஜனவரி 02 ஆம் திகதிக்கு முன்னர் கூடும் என எதிர்பார்க்கப்படவில்லை. எனினும் அவசரநிலை ஏற்பட்டால் கவுன்ஸிலின் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்படலாம் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

தற்போதைய பதில் பொலிஸ் மா அதிபர் தேச பந்து தென்னகோன் மற்றும் தவறிழைத்த ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக் காற்று நடவடிக்கை எடுக்குமாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள் ளமையும் கவனிக்கப்பட வேண்டிய அம்சமாகும்.

# நாவிதன்வெளி பிரதேசத்தில் நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டம்!

(எம்.எம்.றம்ஸீன்)



கிழக்கு மாகாண மீன் பிடித் திணைக் களத்தின் ஆலோசனைக்கு அமைவாக கல்முனை பிராந்திய மீன்பிடித் திணைக் களமும், நாவிதன்வெளி பிரதேச செயலகமும் இணைந்து நன்னீர் மீன் வளர்ப்பை ஊக்குவிக்கும் செயற்றிட் டத்தை முன்னெடுத்துள்ளன.

பி.எஸ்.டி.ஜி. நிறுவனத்தின் நிதிய தவியின் கீழ் முதற்கட்டமாக நாவிதன் வெளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட நாவிதன்வெளி-01 மற்றும் அன்னமலை-01 கிராம அலுவலர் பிரி வுகளில் உள்ள பெரிய குளங்களில் 10 ஆயிரம் மீன் குஞ்சுகள் வீதம் விடப்பட்டது.

நாவிதன்வெளி பிரதேச செயலர் இரா.ராகுலநாயகி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி தி. கிருபைராஜா, கிராம அலுவலர் பிரிவுக ளுக்கான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மீன் பிடி திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் மீன்பிடி சங்க உறுப்பினர்களும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண் டனர்.



# இரண்டு வாரங்களாகத் தொடர்மழை அம்பாறையில் பெரும் வெள்ளம்!

(எம்.எப்.நவாஸ்)

அம்பாறை மாவட்டத்தில் இரண்டு வாரங்களாகத் தொடர் மழை காரணமாக பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டக் கரையோரப் பிரதேசங்களில் பொத்துவில், திருக்கோவில், அக்கரைப்பற்று, அட்டாளைச் சேனை, கல்முனை, சம்மாந்துறை பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இதில் அட்டாளைச்சேனை 08 ஆம் பிரிவு பிரதேசத்தில் நீர் அதிகமாக தேங்கி இருப்பதனால் மக்கள் அன்றாட வேலைகளை பூர்த்தி செய்ய முடியாமல் உள்ளனர்.அட்டாளைச் சேனை பிரதேச சபை நீரோடுவதற்காக வழி வகைகளை செய்வதோடு வீதிகளைப் புனர் நிர்மாணம் செய்யுமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# வட மாகாண ரீதியில் நெற் பயிர்களில் வெண்முதுகு தாவரத்தத்தியின் தாக்கம்

## மன்னாரில் அவசர கலந்துரையாடல்

(மன்னார் நிருபர்)

வட மாகாண ரீதியில் நெற் பயிரில் ஏற்படும் பாரிய நோய் தாக்கமான 'வெண்முதுகு தாவரத்தத்தியின்' தாக்கம் தொடர்பாக மன்னார் மாவட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளுக்குத் தெளிவுபடுத்தும் விசேட கலந்துரையாடல் மன்னார் உயிலங்குளத்தில் அமைந்துள்ள கட்டுக்கரை குள திட்ட முகாமைத்துவக் குழுவின் கேட்போர் கூடத்தில் வட பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலைய உதவி பணிப்பாளர் எஸ். ராஜேஷ் கண்ணா தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் வட மாகாணத்தில் தற்போது நெற் பயிர்களில் பாரிய அளவு சேதத்தை ஏற்படுத்தும் நோய் தாக்கம் தொடர்பாக விவசாய அமைப்பு பிரதிநிதிகளுக்குப் பணிப்பாளரால் தெளிவுபடுத்தப்பட்டது.




அதனைத் தொடர்ந்து நோய் தாக்கத்தின் பாதிப்புகள் தொடர்பாகவும் கட்டுப் படுத்துவதற்கான வழிமுறைகள் மற்றும் பாவிக்கப்பட வேண்டிய மருந்துகள் தொடர்பாகவும் பணிப்பாளரால் விளக்கம் அளிக்கப்பட்டது.

இதன்போது நெற்பயிர்ச் செய்கையில் வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்கள் வெண் முதுகுத் தத்தியால் பாரிய பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்து வருவதாகவும் இவற்றில் 4 மாவட்டம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வட பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலைய உதவி பணிப்பாளர் எஸ். ராஜேஷ் கண்ணா தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் 5 ஆயிரம் ஹெக்ரெயர் நிலப்பரப்பும், கிளிநொச்சி மாவட்டத்தில் 800 ஹெக்ரெயர் நிலப்பரப்பும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 650 ஹெக்ரெயர் நிலப்பரப்பும், வவுனியா மாவட்டத்தில் 700 ஹெக்ரெயர் நிலப் பரப்புமாகப் பெரும் பரப்பு வயல் நிலங்கள் பாதிப்படைந்துள்ளன.

மன்னாரைப் பொறுத்தவரையில் மிக குறுகிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இவற்றைக் கட்டுப்படுத்த விவசாயிகள் துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.



# சிவனொளிபாத மலையின் சுவாரஸ்யம்!

(மஸ்கெலியா நிருபர் செ.தி. பெருமாள்)

இரத்தினபுரி மாவட்டத்தின் மத்திய மலை நாட்டின் தெற்குப் புறத்திலும் சப்ரகமுவ மாகாணம் மற்றும் மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டத்திலும் அமைந்துள்ள இந்த மலையானது இரத்தினபுரிக்கு வடகிழக்கே சுமார் 40 கிலோ மீற்றர் மற்றும் ஹட்டனின் தென்மேற்கில் 32 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. சுற்றியுள்ள பகுதி பெரும்பாலும் காடுகள் நிறைந்த மலையாகும். இந்த மலையை ஒட்டிய பகுதி ஒரு வனவிலங்குக் காப்பகமாகும்.

கொழும்பில் இருந்து ஹட்டன் செல்லும் வீதியில் உள்ள கினிகத்தேனையை அடுத்து வரும் கரோலினா சந்தியிலிருந்து தெற்கு நோக்கி நோட்டன் பிரிட்ஜில் லக்சபான மவுசாக்கல ஊடாக நல்லதண்ணி எனும் மலையடிவாரம்வரை ஓர் பாதை செல்கிறது. இங்கிருந்து கால்நடையாக மலைக்குச் செல்ல வேண்டும். இதுவே சிவனொளிபாத மலைக்கு செல்லக் கூடிய இலகுவான பாதையாகும்.

இன்னுமோர் வழியும் இந்த மலைக்குச் செல்வதற்கு உள்ளது. கொழும்பில் இருந்து இரத்தினபுரிக்குச் செல்லும் வழியில் உள்ள குருவிட்ட என்னுமிடத்தில் இருந்து கிழக்கு நோக்கி எக்னெலிகொடா, எம்புல்தெனியா, குருளுவான ஊடாக பாலபெத்தலே என்னுமிடத்தை அடைந்து அங்கிருந்து கால்நடையாக மலைக்கு செல்வதாகும்.

இங்கு சிவபெருமானின் 0.55 மீற்றர் (1.8 அடி) நீளமான பாதம் பதிந்துள்ளதாகக் கருதி இந்து மக்கள் 'சிவனொளிபாதமலை' எனவும் புத்தரின் கால்தடம் பதிந்துள்ளதாகக் கருதி 'ஸ்ரீபாத' என்று பௌத்தர்களும் ஆதாம் (அலை) கால்தடம் பதிந்துள்ளதால் 'ஆதாம் மலை' என்று முஸ்லிம்களும் உலகில் முதல் மனிதனாகிய ஆதாமின் கால்சுவடு பதிந்துள்ளதால் கிறிஸ்தவர்கள்'அடம்ஸ் பீக்' என்றும் அவரவர் மதநம்பிக்கைகளின் அடிப்படையில் பல பெயர்களால் அழைக்கின்றனர். இதனால் சர்வமதங்களின் ஒற்றுமைச் சின்னமாகவும் இந்த மலை திகழ்கின்றது.

ஸ்ரீபாத ஆதாமின் சிகரம், பாவா ஆதம் மலை, சிவபதம் என பலபெயர்களால் அழைக்கப்படுகிறது. சிவனொளிபாத மலையின் யாத்திரைக்கான பருவ காலம் ஆரம்பிக்கும் காலப் பகுதியில் மலையகம் எங்கும் வண்ணத்துப்பூச்சிகள் அலை அலையாகப் பறந்து திரிகின்றன. இவை அனைத்தும் சிவனொளிபாத மலைக்குச் சென்று இறைவனைச் தரிசிப்பதாக நம்பப்படுகின்றது.

மலை உச்சியை நோக்கிப் படிகள் வழியே ஏறிச் செல்லும் பாதையின் இருமருங்கிலும் விகாரைகள் கட்டப்பட்டுள்ளன. அவசர தேவைகருதி வைத்திய முகாம்களும் முதலுதவி முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இரவு மலை ஏற ஆரம்பித்தால் அதிகாலை வேளையில் மலை உச்சியைச் சென்றடைந்து, இறைவனின் பாதங்களைத் தரிசித்துவிட்டு சூரியன் உதிக்கும் உன்னதமான காட்சியைப் பார்க்க முடியும். சிங்களவர்களின் சம்பிரதாயத்துக்கு அமைய மத்தளம் அடித்து, முரசு கொட்டிச் சூரிய பகவானுக்கு மரியாதை செலுத்துவார்கள்.

இயற்கை அன்னையின் பிறப்பிடமான மலைநாட்டின் அற்புதமான எழில் கொஞ்சும் காட்சியைக் காண்பதற்கு சிவனொளிபாத மலையே சிறந்த இடமாகும். இந்த மலையில் இருந்து கொழும்பு, பேருவளை மற்றும் கலங்கரை விளக்கங்களைக் காண்பதோடு, சூரியோதயத்தையும் சூரிய அஸ்தமனத்தையும் கண்குளிரக் காண முடியும்.

சிவனொளிபாதமலை பக்திக்கும், இயற்கை அழகுக்கும் மட்டும் பிரசித்தி பெறவில்லை. மாறாகப் பல ஆறுகளின் 'நதிமூலமும்' இந்தச் சிவனொளிபாத மலையில்தான் என்று கூறுவதில் தப்பில்லை. இலங்கையின் மிக நீளமான மகாவலி கங்கை, களுகங்கை, களனிகங்கை உள்ளிட்ட பல ஆறுகள் ஊற்றெடுப்பது இந்த மலையிலிருந்து தான்.

டிசெம்பர் முதல் மேவரை யாத்திரைக் காலமாகக் கருதப்படுகிறது. உச்ச யாத்திரைப் பருவமாக ஏப்ரல் மாதம் உள்ளது. இந்தச் சிவனொளிபாதமலை பக்தி பூர்வமானது, வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்று உலகளாவிய ரீதியில் போற்றப்பட்டாலும் இதைத் தரிசிக்கச் செல்லும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதன் புனிதத்தைப் பாதுகாக்கின்றனரா என்பதும் கேள்விக் குறியாகவே உள்ளது.

கொட்டும் பனித்துளிகள் உடம்பில் பட்டு சில்லிடும்போது குளிர்காற்றில் மழைச் சாரல் தூவானமாக சிந்திக் கொண்டிருக்கும் காலத்தில் மலை ஏறுவதும் ஒரு சுவாரஸ்யம்.



# அதிபர், ஆசிரிய ஆலோசகர்களின் களப் பயணம்

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ் )

புத்தளம் வலயத்தின் வடக்கு கோட்ட அதிபர்களதும் ஆசிரியர் ஆலோசகர்களதும் திறன் கட்டமைப்பு வேலைத்திட்டத்தின் களப் பயணம் புத்தளம் வடக்கு கோட்டத்தில் உள்ள சகல அதிபர்களையும் உள்ளடக்கியதாக புத்தளம் வடக்கு கோட்ட கல்விப் பணிப்பாளர் திருமதி அஸ்கா அஜிஹர் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் களப் பயணம் கற்பிட்டி நிர்மல மாதா சிங்கள பாடசாலை, றோமன் கத்தோழிக்க தமிழ் பாடசாலை மற்றும் கற்பிட்டி முகத்துவாரம் முஸ்லிம் பாடசாலை, சிங்கள பாடசாலைகளை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது.

அந்தப் பாடசாலைகளின் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் முழுமையாக அவதானிக்கப்பட்டது. மேற்பார்வை செய்யப்பட்டது.




# தொழில் நிலையங்களை பார்வையிட்ட மாணவர்கள்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டப் பாடசாலைகளில் தற்போது கல்விப் பொதுத் தராதர உயர்தர கலைப் பிரிவில் கற்கும் தெரிவு செய்யப்பட்ட 60 மாணவர்கள் மாவட்ட செயலகம் மற்றும் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் அனுசரணையுடன் மாவட்டத்தில் இயங்கும் தொழில் நிலையங்களைப் பார்வையிட்டனர்.

அராபத் மகா வித்தியாலயம், திரியாய் தமிழ் மகா வித்தியாலயம், நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி, பெண்கள் உயர்நிலைப் பள்ளி, ராஜகீய வித்யாலோக வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள் திருகோணமலை தொழில் நுட்ப கல்லூரி, உயர் தொழில் நுட்ப கல்லூரி, இறக்கண்டி தொழில் பயிற்சி நிலையம் ஆகியவற்றை பார்வையிட்டனர்.

இந்தக் களப் பயண நிகழ்வில் மாவட்ட மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தரும் இணைப்பாளருமான திருமதி ஜெசினா பௌமி, மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் சஜிதா பானு, திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜீனத் பானு ஆகிய அலுவலர்களும் கலந்து கொண்டனர்.





# முல்லைத்தீவில் பண்பாட்டு பெருவிழா!

(ந.லோகதயாளன், ச.தவசீலன் )

முல்லைத்தீவு மாவட்ட செயலகம், வடமாகாண பண்பாட்டுத் திணைக்களம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி திணைக்களம் இணைந்து நடத்திய மாவட்ட பண்பாட்டு பெருவிழா மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

கரைத்துறைப்பற்று பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் தலைவரும் முன்னாள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபருமான நா.வேதநாயகனும் கௌரவ விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. மாலதி முகுந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கலாசார ஊர்வலத்துடன் ஆரம்பமாகிய நிகழ்வில் கலை நிகழ்வுகள், அதிதிகளின் உரைகள் இடம் பெற்றன. நிகழ்வின் இறுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கலைத்துறைக்கு மிகுந்த பங்களிப்பை நல்கிவரும் 6 மூத்த கலைஞர்களுக்கு“முல்லைக் கலைக்கோ” விருதும் கலைத்துறைக்கு மிகுந்த பங்களிப்பை நல்கிவரும் 6 இளம் கலைஞர்களுக்கு “முல்லை இளஞ்சுடர்” விருதும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலர் சி.குணபாலன், மாவட்டத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் க.லிங்கேஸ்வரன், பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணம், சமுர்த்திப் பணிப்பாளர் மு.முபராக், பதில் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.க.ஜெயபவானி, பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்ட செயலாளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள், கணக்காளர், அரச திணைக்களங்களின் தலைவர்கள், உத்தியோகத்தர்கள், கலைஞர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.









# ஏத்தாளை தமிழ் வித்தியாலய மாணவர் அலரி மாளிகைக்கு!



(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி ஏத்தாளை அரசினர் றோமன் கத்தோழிக்க தமிழ் வித்தியாலய மாணவர்கள் அலரி மாளிகைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

இந்தப் பாடசாலை மாணவர்களைப் பிரதம மந்திரி தினேஷ் குணவர்தன வரவேற்றார். இந்த வருகையை நினைவு கூறும் வண்ணம் நினைவுப் பலகையையும் மரக் கன்றையும் பாடசாலைக்கு வழங்கினார்.

அத்தோடு தமது பாடசாலைக்குப் பிரதமர் விஜயம் செய்வது பற்றியும் கற்பிட்டிக்கான நிரந்தர பிரதேச செயலர் நியமனத்தின் தேவைப்பாடு பற்றியும் கலந்துரையாடியதாகப் பாடசாலையின் அதிபர் எம். நஜீப்தீன் தெரிவித்தார்.

# மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற தக்காளி சோஸ் கலன்கள் அழிப்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நிறமூட்டி எந்தவிதமான உணவு தயாரிப்பு நியதிக்கும் உட்படுத்தாது தயாரிக்கப்பட்ட சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதியான தக்காளி சோஸ் கலன்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழிக்கப்பட்டன .

ஹோமாகம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். இந்திக கடுதம்ப தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர்கள் பாதுக்க, வட்டறுக்க, யொவுன்கம பிரதேசத்தில் அமைந்திருந்த தொழிற்சாலையில் இந்த சோஸ் மாதிரிகளைப் பெற்று பரிசோதனை மேற்கொண்டனர்.

இந்த நிலையில் இவை மனித நுகர்வுக்குப் பொருத்தமற்றது என்பதோடு இந்தச் சோஸில் தக்காளி சேர்க்கப்படவில்லை என்பதும் தெரியவந்தது.

இந்த நிலையில் இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், குற்றத்தை ஒப்புக்கொண்ட நிறுவனத்துக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும், ஏற்கனவே தயாரிக்கப்பட்ட சோஸ் கலன்களை அழிக்குமாறும் ஹோமாகம நீதிமன்ற நீதிவான் நிப்புலி லங்காபுர உத்தரவு பிறப்பித்தார்.



# மட்டக்களப்பு கரடியனாற்றில் கசிப்பும், கோடாவும் மீட்பு!

## இளைஞர்கள் இருவர் கைது!!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஈரளக்குளம், பஞ்சு மரத்தடி காட்டுப் பிரதேசங்களில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின் போது 8 பாரிய பரல்களில் கசிப்பு மற்றும் கோடாவுடன் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கரடியனாறு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் நிலைய போதைப் பொருள் ஒழிப்பு பிரிவின் பொறுப்பதிகாரி எச்.எம்.ஸியாத் தலைமையிலான பொலிஸ் குழுவினர் சுற்றி வளைப்பு மேற்கொண்டனர்.

இதன்போது சந்திரவெளி மற்றும் சித்தாண்டி பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கரடியனாறு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# யானையின் தொடர்ச்சியான தாக்குதல்; பாடசாலை செல்வதில் மாணவர் தயக்கம்!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மஹியங்கன மகாவலி கங்கை பிரதேசத்தில் இருந்து பகலிலும் இரவிலும் கூட்டம் கூட்டமாக வரும் காட்டு யானைகள் பாடசாலைகளுக்குள்ளும் புகுந்து அட்டகாசம் செய்கின்றன. மஹியங்கன தேசிய பாடசாலை மற்றும் சித்தாத்த கனிஷ்ட வித்தியாலயம் ஆகியவற்றின் பிரதான நுழைவாயில் மதில்கள் உடைக்கப்பட்டு அழகுக்காக பாடசாலை சூழலில் நடப்பட்டுள்ள மரங்களும் பூச்சட்டிகளும் மிகவும் மோசமாக தாக்கி சேதப்படுத்தப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் இந்தச் செயற்பாடுகள் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ கல்வித் திணைக்களமோ எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்காமலிருப்பது மிகவும் கவலையளிப்பதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர். தமது பிள்ளைகளை காலை வேளையில் உணவு பார்சல்களோடு பாடசாலைக்கு அனுப்புவதில் பலவித மான சிக்கல் தோன்றியுள்ளது. பாட சாலைக்கு வேளைக்கு செல்வதிலும் பிள்ளைகள் தயக்கம் காட்டி வருகின்றனர் என்று பெற்றோர் மேலும் தெரிவித்தனர்.

# கிண்ணியாவில் தாழ் நிலப் பகுதிகள் கனமழையால் வெள்ளத்தில் மூழ்கின





**(ஹஸ்பர்)**

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலக பகுதியில் உள்ள பல தாழ் நிலப் பகுதிகள் வெள் ளத்தில் மூழ்கியுள்ளன. மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

கிண்ணியா பொலிஸ் நிலையம் உட்பட பல வீடுகள், காணிகளுக்குள் வெள்ளம் தேங்கியுள்ளது.

இன்றும் (16) அடை மழை காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். நீர் வடிந்தோடக் கூடிய வடிகான் வசதிகள் இல்லாமல் மழை நீர் தேங்கி நிற்கின்றது.

கிண்ணியா பொலிஸ் நிலையத்திலுள்ள வெள்ள நீரை வெளியேற்ற பெகோ இயந்திரம் ஊடாக வடிகால் வெட்டப்படகிறது.

அன்றாட ஜீவனோபாயமாக அன்றாடம் கூலித் தொழில் செய்யும் மக்கள் இதனால் பல்வேறு கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

கிண்ணியா அண்ணல் நகர் பகுதி மக்களின் வீடு, காணிகளுக்குள் வெள் ளம் புகுந்தததால் மீனவத் தொழில் உபகரணங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று கவலை தெரிவிக்கின்றனர்.




# சிவனொளிபாத மலைக்கு மின் மாற்றிகள்; ஹெலிக்ஹொப்டர் மூலம் பணி மும்முரம்!

**(மஸ்கெலியா நிருபர்)**

சிவனொளிபாத மலைக்குச் சுத்தமான குடி தண்ணீர் வழங்கவும் தடை இன்றி மின் வழங்கவும் இலங்கை மின்சார சபை முன் வந்து சிவனொளிபாத மலைக்கு செல்லும் பிரதான வீதியில் மூன்று இடங்களில் புதிய மின் மாற்றிகள் பொருத்தும் பணி ஆரம்பிக்கபட்டுள்ளது. துரிதமாகப் பணிகள் இடம் பெற்றுவருகின்றன.

இதற்கு இரத்மலான விமானப் படையின் ஹெலிக்ஹொப்டர் மூலம் மின்மாற்றிகள் மற்றும் மின் உபகரணங்கள் கடந்த இரண்டு நாள்களாக நல்லதண்ணி நகரில் உள்ள வாகன தயாரிப்பு இடத்தில் இருந்து இந்தப் பொருள்கள் கொண்டு செல்ல படுகின்றன.

மின் மாற்றிகள் பொருத்திய பின்னர் சியத்த கங்குல ஓயா பகுதியில் இருந்து சுத்தமான குடி தண்ணீர் மலை உச்சிக்குக் கொண்டு செல்லபட்டு அங்கு இருந்து மலை அடிவாரம் வரை உள்ள பகுதிகளில் குடி தண்ணீர் வழங்க முடியும் எனவும், மலைக்கு செல்லும் வழியில் யாத்திரியர்களுக்குக் குடி தண்ணீர் பெற்றுக் கொள்ள சகல வசதிகளும் செய்து கொடுக்க உள்ளது என்று தேசிய நீர் வடிகால் திணைக்களம் தெரிவித்துள்ளது.





# சந்நிதியான் ஆச்சிரமத்தால் வாராந்த நிகழ்வில் உதவிகள்!

## 2 லட்சத்து 36 ஆயிரம் ரூபா பெறுமதியில் வழங்கப்பட்டன

சந்நிதியான் ஆச்சிரமத்தால் 2 லட்சத்து 36 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியில் உதவிகள் நேற்று இடம்பெற்ற வாராந்த நிகழ்வில் வைத்த வழங்கப் பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் ஆசிரியர் இரா. செல்வவடிவேல் மகாபாரதம் என்றும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த 10 மாணவர்களுக்கு 35 ஆயிரம் ரூபா பெறுமதியான பாதணிகள் வழங்கப்பட்டன. அல்வாய் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழாவுக்கு மாணவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான புத்தகப்பைகள், கரு விப்பெட்டிகள், சாப்பாட்டுப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

தொண்டைமானாறு பிரதேசம் உள்ளடங்கலாக ஜே - 386 - கெருடாவில் வடக்கு, ஜே-385 - கெருடாவில் தெற்கு, ஜே - 383 - தொண்டைமானாறு தெற்கு கிராம நிர்வாக பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட சிறுவர், கர்ப்பிணித் தாய்மார்கள் உள்ளடங்களான 29 குடும்பங்களுக்கு ஒரு லட்சத்து ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான சத்துணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த உதவித் திட்டங்களை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் வழங்கினார்.













# முத்தையன்கட்டுக் குளத்தின் நான்கு வான் கதவுகள் திறப்பு!

## மக்களை அவதானமாக இருக்குமாறு கோரிக்கை!!

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றாகக் காணப்படும் முத்தையன்கட்டுக் குளத்துக்கான நீர்வரத்து அதிகரித்துள்ளது. இந்த நிலையில் குளத்தின் நான்கு நான் கதவுகள் இன்று (16) காலை திறந்து வைக்கப்பட்டுள்ளன.

24 அடி கொள்ளளவு கொண்ட முத்தையன்கட்டுக் குளத்தில் 23 அடி 3 அங்குல நீர்மட்டம் காணப்படுகிறது. நீர் வரத்து அதிகரித்துள்ள நிலையில் இரண்டு வான் கதவுகள் ஆறு அங்குலத்துக்கும் இரண்டு வான் கதவுகள் மூன்று அங்குலத்துக்கும் திறந்து விடப்பட்டுள்ளன.

இன்று காலை முத்தையன்கட்டு நீர்ப்பாசன பொறியியலாளர் திருமதி மஞ்சுளா ஜொய்ஸ்குமார் அழைப்பில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அருளம்பலம் உமா மகேஸ்வரன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் திருமதி பரமோதயன் ஜெயராணி, மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் பொறியியலா ளர் நவரட்ணம் சுதாகரன், ஒட்டுசுட்டான் பிரதேச உதவிப் பிரதேச செயலர் இ.றமேஸ், முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் பொறியியலாளர் சிவபாதசுந்தரம் விகிர்தன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டு நான் கதவுகளைத் திறந்து வைத்தனர்.

முல்லைத்தீவு மாவட்டப் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பொறியியலாளர் சிவபாதசுந்தரம் விகிர்தன் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்

முல்லைத்தீவு மாவட்டத்தில் 20 பாரிய மற்றும் நடுத்தரக் குளங்கள் காணப்படுகின்றன. அனைத்துக் குளங்களும் அதன் உச்சக் கொள்ளவை அடைந்துள்ளன. எனவே தாழ் நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் அவதானமாக இருக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஈ.சி கேஸ் முறையில் போதைப் பொருள்களை பரிமாற்றம் செய்த இளம் தம்பதியினர் கைது!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சிலாபம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடசிகம பிரதேசத்தில் வைத்து 72 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் பொட்டேலகம பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய மற்றும் 24 வயதுடைய தம்பதியினரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் பொதி செய்யப்பட்ட 2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான 19 பக்கெட்டுக்கள் மற்றும் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான 5 பக்கெட்டுக்களுடனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.



பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் உடசிகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.வெடிசிங்கவின் பணிப்புரையின் பேரில் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி என்.எம்.திஸாநாயக்க தலைமையலான பொலிஸ் குழுவினர் இந்த சோதனை நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர். முதற்கட்ட விசாரணையின்போது இந்த வியாபாரம் மிக நீண்ட நாள்களாக நடைபெற்று வருவதாகத் தெரியவந்துள்ளது.

# இந்தியாவில் பரவி வரும் புதிய வகை கொரோனா!

இந்தியாவின் கேரள மாநிலத்தில் புதிய வகையான கொரோனா வைரஸ் திரிபு பரவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வைரஸ் தொற்று சிங்கப்பூரிலும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தநிலையில் தமிழகத்தில் மருத்துவ பரிசோதனைகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேநேரம், கேரள மாநிலத்தில் இந்த கொரோனா வைரஸ் திரிபு தொற்று உறுதியான 230 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், அங்கு தொற்று உறுதி செய்யப்பட்ட 1,104 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# நாடாளுமன்ற தேர்தல் கூட்டணி குறித்து ஜனவரியில் விஜயகாந்த் அறிவிப்பார்!

## - தே.மு.தி.க. பொது செயலர் பிரேமலதா தகவல்



மக்களவைத் தேர்தல் கூட்டணி குறித்த முடிவை ஜனவரி மாதத்தில் தேமுதிக தலைவர் விஜயகாந்த் அறிவிப்பார் என கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா தெரிவித்துள்ளார்.

தே.மு.தி.க. பொது செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள பிரேமலதா, சென்னை மெரினாவில் உள்ள எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா நினைவிடங்களில் நேற்று மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இதன்போது அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

"தே.மு.தி.கவின் 18 ஆவது செயற்குழு, பொதுக்குழுவில் கட்சித் தலைவரால் எனக்கு பொதுச்செயலாளர் பதவி வழங்கப்பட்டது. இதையொட்டி, தமிழகத்தின் பெரும் தலைவர்களின் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினேன். அண்ணா, கருணாநிதி நினைவிடங்களில் புனரமைப்பு பணிகள் நடைபெறுவதால், அனுமதி வழங்கப்படவில்லை. தலைவர்களுக்கு மரியாதை செலுத்துவதை அரசியலாக பார்க்கவில்லை.

வரப்போவது மக்களவைத் தேர்தல். எனவே, யாருடன் கூட்டணி, எத்தனை தொகுதியில் போட்டி என்பதை பரிசீலிக்க வேண்டும். கூட்டணி குறித்த அறிவிப்பை வெளியிட தே.மு.தி.க. தலைவருக்குதான் பொதுக்குழுவில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதனால், வெகுவிரைவில் குறிப்பாக ஜனவரி மாதத்தில் கூட்டணி குறித்த முடிவை கட்சித் தலைவர் விஜயகாந்த் அறிவிப்பார்.

தே.மு.தி.க. உட்கட்சி தேர்தல் முடிவடைந்துள்ளது. அடுத்தகட்டமாக கட்சியின் வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசித்து நல்ல திட்டங்களை செயல்படுத்த இருக்கிறோம். தே.மு.தி.கவின் வாக்கு சதவீதத்தில் எந்த சரிவும் ஏற்படவில்லை.

2006 ஆம் ஆண்டு கூட்டணியின்றி தேமுதிக போட்டியிட்டது. மாநில அளவில் 8.33 சதவீதம் வாக்குகளை பெற்றோம். அதன்பின்னர் கூட்டணியுடன் களம் கண்டதால் அந்தத் தொகுதிகளில் உள்ள வாக்கு சதவீதம் மட்டுமே கணக்கில் கொள்ளப்படுகிறது.

எனவே, தே.மு.திகவின் வாக்கு வங்கி நிலையாகவே இருக்கிறது. அதை அதிகரிப்பது தொடர்பாக வியூகம் வகுத்து செயல்படுத்துவோம்." - என்றார்.

# வெள்ள நிவாரணம் வழங்கினார் உதயநிதி ஸ்டாலின்

மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண மளிகை பொருள்களை விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

நேற்றைய தினம் 80 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கும் நிகழ்ச்சி அண்ணாநகர் சட்டமன்ற அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு நிவாரண பொருள்களை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கினார்.

# ஹமாஸின் தவறுதலான தாக்குதலில் பணயக்கைதிகள் 3 பேர் உயிரிழப்பு!

காசாவில் தங்களது தரப்பினர் தவறுதலாக மேற்கொண்ட தாக்குதலில் ஹமாஸ் தரப்பினரால் தடுத்து வைக்கப் பட்டிருந்த 3 பணயக்கைதிகள் கொல லப்பட்டுள்ளனர்.

22, 26 மற்றும் 28 வயதுடைய மூவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ள னர் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

காசாவின் வடக்கு பகுதியில் உள்ள ஷேஜாயா பகுதியில் வைத்து அவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஹமாஸ் தரப்பினரால் நூற்றுக்கும் மேற்பட்ட பணயக் கைதிகள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் காணாமல் போயுள்



ளவர்களை கண்டறிவதும் சகல பணயக் கைதிகளையும் மீட்பதே தங்களது பிரதான நோக்கமாகும் என இஸ்ரேல் பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது.

# துருக்கி நாடாளுமன்றில் ஆவேச பேச்சு: மாரடைப்பால் எதிர்க்கட்சி உறுப்பினர் பலி!






துருக்கி நாடாளுமன்றில், ஆளுங் கட்சியின் இஸ்ரேல் ஆதரவு போக்கை கண்டித்து ஆவேசமாக பேசிய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹசன் பிட்மெஸ், மாரடைப்பு ஏற்பட்டு மயங்கி நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரி ழந்துள்ளார்.

மேற்காசிய நாடான துருக்கியில், ஜனாதிபதி எர்டோகன் தலைமையில் ஆட்சி நடைபெற்று வருகிறது.

அவர்களது அண்டை நாடான, இஸ்ரேல் – பாலஸ்தீனம் இடையே போர் நடைபெற்று வரும் நிலையிலும், இஸ்ரேலுடன் துருக்கி வர்த்தக உறவை பின்பற்றி வருகிறது. இது தொடர்பாக எதிர்கட்சியினர் கடும் விமர்சனங்களை முன் வைத்து வருகின்றனர்.

இரு நாட்களுக்கு முன், துருக்கி நாடாளுமன்றில் நடந்த பாதீட்டு விவா தத்தில், எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாடா ளுமன்ற உறுப்பினர் ஹசன் பிட்மெஸ் பங்கேற்று ஆவேசமாக பேசினார்.

அப்போது, “இஸ்ரேலுக்கு கப்பல் களை அனுமதிக்கிறீர்கள் அதனை வர்த்தகம் என வெட்கம் இல்லாமல் கூறுகிறீர்கள். நீங்களும் இஸ்ரேலின் கூட்டாளி தான்.

காசா மீது இஸ்ரேல் வீசும் ஒவ்வொரு வெடிகுண்டுக்கும் உங்கள் பங்கு உண்டு“ என பேசிவிட்டு, இறங்குகையில் மயக்கம் அடைந்து சரிந்தார்.

அவரை மருத்துவமனையில் சேர்த்து பரிசோதித்ததில், இதயத்திற்கு செல்லும் ரத்த குழாயில் இரு இடங்கள் அடைப்பு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த நிலையில் தீவிர சிகிச்சையில் இருந்த அவர், நேற்று முன் தினம் உயிரிழந்தார் என வெளிநாட்டு ஊட கங்கள் தெரிவித்துள்ளன.

# பிரித்தானியாவில் சிறுவர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்த தடை

16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதை வரை யறுப்பது தொடர்பில் பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் கவனம் செலுத்தியுள்ளார் என செய்தி வெளியாகியுள்ளது.

பிரித்தானியாவில் ஒன்லைன் பாது காப்புச் சட்டம் அண்மையில் நிறை வேற்றப்பட்டது. இதற்கமைய இந்த சட்ட மூலம் விதிக்கப்படவுள்ளது.

சமூக ஊடகங்களின் பயன்பாடு



சிறுவர்களுக்கு பாரிய விளைவுகளை ஏற்படுத்துவதாக ஆய்வுகளில் தெரிய வந்துள்ள நிலையில், இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சட்டமூலத்திற்கு அமைய செயற்படாத சமூக வலைத்தள நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய பிரதமரினால் முன் வைக்கப்பட்டுள்ள ஆலோசனை அடுத்த வருட ஆரம்பத்திலிருந்து நடைமுறைப் படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.